2002 மே 3]

அது ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கிறது. இருப்பினும், நல்ல எண்ணத்துடன்தான், எப்படி Matriculation-ஐச் சரி செய்ய வேண்டுமென்று திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோமோ, அதுபோல, இந்தப் பயிற்சி மையங்களிலும் இவ்வளவு பணம் அதிகமாக வசூலிக்கிறார்கள் என்ற புகார்கள் எழுத்து மூலமாக வந்தால், அதைச் சரி செய்வதற்கு இந்த அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 100 இடங்களிலே இத்தகைய பயிற்சிகள் கொடுக்கப்படுவதாகச் சொல்லி இருக்கிறார்கள். மிக்க மகிழ்ச்சி. அதேநேரத்தில் ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளியிலும் இத்தகைய பயிற்சி கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா? இல்லையானால், குறைந்தபட்சம் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒரு பயிற்சிக் கூடம் ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கருத்தானது மிகவும் சிறந்ததொரு கருத்தாகும். நிதிநிலைமைக்கேற்ப அரசானது இதைப் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 279, திருமதி மல்லிகா சின்னசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

279—

சமயபுரம் கோயில்

***13531—திருமதி மல்லிகா சின்னசாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம் கோயில் சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்தி தூய்மையாக வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருக்கோயில் பகுதிகள் அவ்வப்போது சுத்தம் செய்யப்பட்டு தூய்மையாக வைக்கப்படுகின்றன. திருக்கோயிலின் சுற்றுப்புறத் தூய்மையினைத் தொடர்ந்து பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருமதி மல்லிகா சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், தமிழகத்தின் விடிவெள்ளி, ஏழைகளின் துயர் துடைக்கும் இதய தெய்வம் அம்மா அவர்களின் பொன் மலர்ப் பாதங்களைத் தொட்டு வணங்கி என் வினாவினைத் தொடங்குகின்றேன்.

தமிழகத்திலேயே இரண்டாவது இடத்தைப்பெறும் சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலுக்கு தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் ஆயிரக்கணக்கில் வந்தவண்ணம் இருக்கின்றார்கள். அங்கு பக்தர்களுக்கு வசதிகள் குறைவாகவும், கோயிலைச் சுற்றியுள்ள பாதை மிகவும் குப்பைகள் நிறைந்து தூய்மையற்றும் இருக்கிறது. பாதையில் உள்ள குப்பைகளை வெளியேற்றி, சுற்றுச் சூழலை மேம்படுத்திக் கொடுக்க வேண்டும். அதற்குண்டான நிதி கோயிலில் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துப்புரவுப் பணியாளர்களை நியமனம் செய்து, கோயிலைச் சுற்றியுள்ள பகுதியை மேம்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் வரிவிதிப்பு வருமானம் ஆண்டொன்றுக்கு ரூ.9,02,15,549/- வருவாய் வருகிறது. இத்திருக்கோயில் இணை ஆணையாளர்/செயல் அலுவலர் அவர்களால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. 5 அறங்காவலர்கள் கொண்ட அறங்காவலர் குழு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஏற்படுத்தப்பட்டது, இன்னும் பதவியில் இருந்து கொண்டிருக்கிறார்கள். திருக்கோயிலுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள மண்டபங்கள், மாவிளக்கு மண்டபம், பிரகாரங்கள் ஆகியவை தினசரி காலை, மாலை இருவேளைகளிலும் 14 துப்புரவுப் பணியாளர்களால் அவ்வப்போது சுத்தம் செய்யப்பட்டு குப்பைகள் அகற்றப்பட்டு

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2002 மே 3]

வருகின்றன. மேலும், வாரத்தில் மூன்று நாட்கள் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் மூலம் தண்ணீர் அடித்து சுத்தமாகக் கழுவி விடப்படுகிறது. திருக்கோயில் முன்புள்ள சன்னதி வீதி, மண்டபங்கள் போன்றவை வாரத்தில் ஒருமுறை தண்ணீரால் கழுவி சுத்தம் செய்யப்படுகின்றன. திருக்கோயிலின் திருப்பணி வேலைகள் தொடங்கி தூய்மையாகப் பராமரிப்பதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. தற்போதுள்ள துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாததால் கூடுதலாக துப்புரவுப் பணியாளர்களை தேவைக்கேற்ப தினக்கூலி அடிப்படையில் நியமனம் செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், 27-2-2002 ஆம் தேதி, சட்டமன்ற உறுதிமொழிக் குழு, இத்திருக்கோயிலை வந்து பார்வையிட்டபோது தெரிவித்த கருத்துகளுக்கு இணங்க 7-3-2002 ஆம் தேதியன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் முசிறி சட்டமன்ற உறுப்பினர், காவல் துறை அதிகாரிகள், பேரூராட்சி நிருவாகத்தினர், திருக்கோயில் அறங்காவலர் குழு மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு திருக்கோயில் சுற்றுப்புறத் தூய்மை குறித்து செய்ய வேண்டிய பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. அதன்படி திருக்கோயில், அதனைச் சுற்றியுள்ள இடங்களைத் தூய்மையாகப் பராமரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 280, திரு. சி. சிவசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

280—

உயர்நிலைப் பள்ளிக்கு நிலம்

***18635—திரு. சி. சிவசாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் வட்டம், இடுவம்பாளையம் கிராமத்திலுள்ள இடும்ப குமாரசாமி ஆலயத்திற்குரிய நிலத்தில் 7 ஏக்கர் நிலத்தை அந்த கிராமத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிக்கு கிரயம் செய்து தருவதற்கான நடவடிக்கைகள் எந்நிலையில் உள்ளன?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS